**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 54. ஸ்ரீஹரி ஆனந்த வைஷ்ணவ்ஜி**

---

**உண்மையான வைஷ்ணவ லக்ஷணம் எது?**

அன்பு, அனைவரையும் மதிக்கும் தன்மை, எளிமை, பணிவு, கனிவு, சேவை மனப்பான்மை, யாவற்றையும் ஹரி ரூபமாக வணங்கும் தன்மை.

இக்கால ஸ்ரீவைஷ்ணவர்கள் எத்தனை பேருக்கு இவை உள்ளன?
இக்கேள்வியைக் கேட்க அடியேன் பயம் கொள்ளவில்லை.அடியேனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவன்.பிற தெய்வங்களை மதிக்காத வெறி பிடித்த போலி பக்தியில் உழலுகின்றனர் பலர்.அதன் காரணம் தான் பல மதங்கள் பாரத தேசத்துள் ஊடுருவின எனலாம்.

சனாதன தர்மத்தின் பல மார்க்கங்களில் ஒன்று வைஷ்ணவம்.உண்மையான வைஷ்ணவன் எவரையும் மதிப்பான்.வெறும் பன்னிரு நாமங்கள் தரிப்பதும், திவ்ய தேசங்கள் சேவிப்பதும், தான் மட்டுமே உயர்ந்தவன் என்று கூறுவதும் வைஷ்ணவ அடையாளம் இல்லை.

உண்மையான வைஷ்ணவன் எதையும் உள்ளது உள்ளபடி ஏற்றுக் கொள்கிறான்.அதுவே சரணாகதி.

**ஏழை மாணவன்**

காசியில் வாழ்ந்தவர் ஹரி ஆனந்த்ஜி.இவர் பூரண பக்தியும் பவ்யமும் கொண்ட வைஷ்ணவர்.உண்மையான ஸ்ரீராமனுஜ தத்வத்தை அனுபவிப்பவர்.இவரை மக்கள் மிகவும் மதிப்பர்.இவரிடம் பல மாணவர்கள் வேத பாட சாலையில் பயின்றனர்.அவர்களுள் ஒருவன் பல்ராம்.அவன் ஏழை.ஆனால் மிக்க ஸ்ரத்தையுடன் படிக்கிறான்.அவனது அறிவும், பக்குவமும், குரு சேவையும் ஹரி ஆனந்த்ஜிக்கு மிகவும் பிடிக்கும்.

**உஞ்ச வ்ருத்தியில் ரொட்டி மாவு**

பாட வேளை முடிந்து உஞ்ச வ்ருத்தி செய்வான் பல்ராம்.தினமும் கிடைக்கும் ரொட்டி மாவைக் கொண்டு வந்து ஆனந்த்ஜியின் மனைவியிடம் ஒப்படைப்பான்.மேலும் அதில் ஒரு பங்கைக் கொண்டு சில ரொட்டிகள் செய்து ஏழைகளுக்கு அளிப்பது அவனது வழக்கம்.படிப்புடன் கூடிய விவேகமும் சேவையும் அவனை மிகவும் தூய்மை செய்தன.

**"நாளை உனக்குச் சாவு!"**

ஒரு முறை அவன் உஞ்ச வ்ருத்தி செய்து தன் இடம் மீளும் போது கபீர் தாஸின் குரு ஸ்ரீராமானந்த்ஜியின் தரிசனம் கிடைக்கப் பெற்றான்.அவர் முன்னிலையில் பவ்யமாக அமர்ந்து ஆத்ம சமர்ப்பணமும் உஞ்ச வ்ருத்தி மாவையும் அர்ப்பணம் செய்து த்யானம் செய்தான்.அவனது பக்குவம் கண்ட குருதேவ் கண்களில் நீர் வழிய அவனைப் பார்த்து, "மகனே! நாளை உனக்கு மரணம் அப்பா!" என்று கூறிச் சென்று விடுகிறார்.இதனால் சற்றும் மனம் கலங்காத அவன், தன் உடல் அநித்யம் என்று உணர்ந்த அவன் அமைதியாகச் சென்று ஹரி ஆனந்திடம் தன் அனுபவத்தைக் கூறினான்.

அன்று இரவு அமைதியாக அனைவரும் தூங்கினர்.மறுநாள் காலையில் கங்கையில் நீராடினர் குருவும் மாணவனும்.அவன் எவ்வித எதிர்பார்ப்பும் சலனமும் இன்றித் தன் பாடங்களைப் படித்தான்.மதியம் உணவுக்கு முன் ஆனந்த்ஜி அவனை அழைத்துக் கொண்டு த்யானத்தில் ஆழ்கிறார்.சமாதி நிலைக்கு அவனை முன்னமே பயிற்றுவித்தவர் அவர்.இருவரும் ஆழ்ந்த சமாதியில் லயித்து இருந்தனர்.மரண நேரம் வந்த போது பாண்டுரங்கனின் சுதர்சனம் எமனைத் தடுத்தது.

***"மரணம் என்பது மாற்றம்.அது பயம் அல்ல.அம்மாற்றம் முக்திக்கு வழி செய்யும். அதையும் நிர்ணயம் செய்வது எம தத்வமான ப்ரஹ்மமே! இதை அடியேன் ஏற்றுக் கொள்கிறேன்!"*** என்று தன் சமாதி நிலையில் அவன் உணர்ந்த காரணத்தால் அவனுக்கு சாவு தள்ளிப்போனது.இதையே ஜோதிடம் பரிகாரம் மூலம் கண்டத்தை விலக்கும் வழியாகக் காட்டுகின்றது.உண்மையாக இறைவனைச் சரண் புகுந்தோர்க்கு அதை விடச் சிறந்த பரிகாரம் வேறில்லை.

**நாளை தனக்குச் சாவு என்பதை அறிந்த இப்பையன் சற்றும் சலனம் கொள்ளவில்லை, பயப்படவில்லை.அதுவே அவன் எமபயத்தை வெற்றி கொண்டு தன் உடல் பற்றுக்கு முடிவைக் கட்டினான் என்று உணர்க.**

தன் மாணவனின் சாவைத் தள்ளிப் போடும் படி அவனுக்கு வழிகாட்டிய ஹரி ஆனந்த்ஜியை அன்பர்கள் போற்றினர்.

ஹரி ஓம்!